# முத்தமிழ் விழா இன்று கோலாகல ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ்விழா இன்று பிற்பகல் 5.30 மணிக்கு மானிப்பாயில் கோலாகலமாக ஆரம்பமாகிறது இன்றும், நாளையும், நாளை மறுதினமும் மானிப்பாய் மைதானத்தில் இடம்பெறும் விழா நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, இரண்டு நாட்கள் தென்மராட்சிப் பகுதியிலும், மூன்று நாட்கள் வடமராட்சிப் பகுதியிலும், இறுதி இரண்டு நாட்கள் யாழ் முற்ற வெளியிலுமாக பத்து நாட்களுக்கு நீடிக்கவுள்ளது. இம் முத்தமிழ் விழா நிகழ்வுகளில் மாவீரர் வாரத்தில் இடம்பெற்ற போட்டி நிகழ்ச்சிகளுக்கான பரிசளிப்பும் தன்னலமற்று நாட்டுக்காகச் சேவையாற்றிய ஒன்பது மாமனிதர்களைக் கௌரவிக்கும் வைபவமும் இடம்பெறவுள்ளது. தமிழீழத்தின் பல்வேறு

(6ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 4 50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 23 (06 06 1991) வியாழக்கிழமை ஓசை: 108

## வெளியே செல்வதற்கு புதிய விதி முறைகள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 10ஆம் திகதியிலிருந்து வடபகுதிக்கு வெளியே செல்லவிரும்பும் ஒருவர் புதிய விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்; பழைய அனுமதிமுறை 9 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. ஆயினும் பழைய அனுமதியை இப்போதே பெற்றுவிட்டவர்களது வசதிக்காக அத்தகையவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி (6ஆம் பக்கம் பார்க்க)

# உன்னதமான சமுதாயமாக எமது தாயகத்தை நிறுவுவோம்

தியாகி சிவகுமாரனின்

## இலட்சியத்தை நிறைவேற்ற அணிதிரளுவோம் - காஸ்ரோ

(உரும்பராய்)

தியாகி சிவகுமாரனின் 17 ஆவது ஆண்டு நினைவுக் கூட்டம் நேற்றுமாலை நடைபெற்றது.

விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் பேபி சுப்பிரமணியம் உட்பட பலபிரமுகர்கள் இந்தவிழாவில் கலந்துகொண்டனர்.

இங்கு உரையாற்றிய யாழ். மாவட்ட பிரதித் தளபதி காஸ்ரோ கூறுகையில் நாம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய தீவிரவாதிகளைவிட புலிகள் வேறுபட்டவர்கள்

### இந்திய புலனாய்வுக் குழு கருத்து

(சென்னை)

இந்தியப் பிரிவினை வாதக் குழுவினரைவிட விடுதலைப் புலிகள் இயக்கம் அதன் தொழிற்பாடுகள் குறித்து வேறுபட்டிருக்கிறது என இந்தியப் புலனாய்வுக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

பரந்தளவு வெடிமருந்துப் பாவனை, தற்கொலைத் தாக்குதல்கள், பெண் கெரில்லாக்களை பயன்படுத்துதல் போன்ற விடயங்களில் ராஜீவ் காந்தியை கொல்லவிருந்த பிரிவினைவாதக் குழுக்களைவிட தமிழீழ விடுதலைப் புலிகள் வேறுபட்டது என்று அவர்கள் தெரிவித்தனர்.

## இரு ஊர்காவற் படையினர் கல்கத்வெலவில் பலி

(திருமலை)

சிறிலங்கா ஊர்காவல் படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் ஸ்தலத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை காலை திருமலை மாவட்டத்திலுள்ள கல்கத்வெல என்னும் இடத்தில் நடை பெற்ற தாக்குதலின்போதே ஊர்காவல் படையினர் இருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சித்தாண்டியில்

## இராணுவத்தின் சூட்டிற்கு இரு பொலிஸார் பலி

(மட்டக்களப்பு)

பொதுமக்களைத் தாக்கிய பொலிசார் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரு பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பியோடினர்.

மட்டக்களப்பு சித்தாண்டிப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நயினை உற்சவத்திற்கு வெளியார் செல்லத்தடை

(வேலணை)

சரித்திர பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 12-ம் திகதி (12-6-91) கொடியேற்றத்துடன் ஆரம்பமாக இருக்கின்றது.

பதினாறு தினங்களுக்கு நடைபெற விருக்கும் இவ் ஆலய உற்சவங்களில் வெளியூர் யாத்திரிகர்கள் எவருமே கலந்துகொள்ள கடற்படையி

(6ஆம் பக்கம் பார்க்க)

## கலைஞர், அறிஞர், எழுத்தாளர்களுக்கு தலைவர் பிரபாகரன் அழைப்பு

(யாழ்ப்பாணம்)



மனித வாழ்வும் சமூக உறவுகளும் மேன்மை பெறுகிறது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

"ஒரு தாயகத்தைக் கட்டி எழுப்பும்பணி புனிதமானது. இந்தப் புனித பணியில் பங்குகொள்வது எல்லோரதும் தேசிய கடன். ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புதமான தியாகத்தில் உருவாகி வரும் எமது தாயகத்தை ஒரு உன்னதமான, மேன்மையான சமுதாயமாக மாற்றியமைக்க வேண்டும். இந்த சமூக மாற்றத்திற்கு வழிகோலும் வகையில் சிந்தனையாளர்களும் சிருஷ்டிகர்த்தாக்களும் எமது இயக்கத்திற்கு பக்கபலமாக நின்று பணியாற்ற வேண்டும்".

இவ்வாறு இன்று ஆரம்பமாகும் முத்தமிழ்விழா தொடர்பாக தலைவர் பிரபாகரன் விடுத்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்,

இவ்வாழ்த்துச் செய்தியின் முழுவிபரமும் வருமாறு;

மொழி, கலை, கலாசாரம் என்பன, ஒருதேசிய இனத்தின் கட்டமைப்பிற்கு தூண்களாக விளங்குகின்றன. ஒரு தேசியத்தின் ஆன்மாவாக திகழ்கின்றன. ஒரு தேசிய நாகரிகத்திற்கு அத்திவாரமாக அமைகின்றன.

மொழியும், கலையும், கலாசாரமும் வளம் பெற்று, வளர்ச்சியும் உயர்ச்சியும் அடையும் பொழுதே, தேசிய இனக்கட்டமைப்பு இறுக்கம் பெறுகிறது. பலம் பெறுகிறது. தேசிய நாகரிகம் உன்னதம் பெறுகிறது.

கிளிநொச்சியில்

## பாடசாலை மீது குண்டு வீச்சு; இருவர் பலி; மாணவன் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பாடசாலை மீது சிறிலங்கா விமானப்படை பொம்மர்கள் நடாத்திய குண்டு வீச்சுத் தாக்குதலினால் இருவர் கொல்லப்பட்டனர்; மாணவன் காயமடைந்தார். பாடசாலைக் கட்டடமும் அருகிலிருந்த வீடும் பலத்த சேதமடைந்துள்ளன.

கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தின் மீது நேற்றுக் காலை பதினொரு மணியளவில் வட்டமிட்ட இரண்டு பொம்மர்கள் நடாத்தியகுண்டு வீச்சுத் தாக்குதலின் போது அதன் அருகிலிருந்த வீட்டின் மீது வீழ்ந்து வெடித்த குண்டினால் ஜெயந்தி நகரைச் சேர்ந்த இராசரத்தினம் கிரிஸ்கா

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவுப் பகுதியில் பலத்த குண்டுவீச்சு

(கிளிநொச்சி)

ஆனையிறவு இராணுவ முகாமைச் சுற்றி வானில் பொம்மர்கள் அவ்ரோ வட்டமிட்டுத் தாக்குதல் நடாத்த ஹெலிகள் வவுனியா, பலாலிப் பகுதிகளிலிருந்து வந்து பலதடவைகள் முகாமிற்குள் இறங்கிச் சென்றன.

நேற்றுக் காலை 6-15 மணியளவில் வவுனியாப் பகுதியிலிருந்து வந்த இரண்டு பொம்மர்கள் இரண்டு அவ்ரோ

(6ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### லெப். மண்ணன் ஜெயராஜ்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற வெடிவிபத்தொன்றில் காயமடைந்திருந்த வீரவேங்கை லெப். மண்ணன் (நடேசகுரு உமாகாந்தன், தம்பலகாமம்) நேற்றுமுன்தினம்

(6ஆம் பக்கம் பார்க்க)

விடுதலை புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் நடாத்தும்

முத்தமிழ் விழா

பொலிந்து சிறக்க வாழ்த்துகிறோம்

- யாழ். மாவட்ட கூட்டுறவாளர்கள்

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் நடாத்தும்

# முத்தமிழ் விழா

## முதல்நாள் நிகழ்ச்சிகள்

இடம்: மானிப்பாய் 'மாவீரர் கலை அரங்கம்'

நாள்: 06-06-1991 வியாழக்கிழமை பி.ப. 5:30 மணி

5 30 — 6 15 மங்கள இசை

நாதஸ்வரம்: திரு. கே. ஆர். சுந்தரமூர்த்தி,
திரு கே. செல்வரத்தினம்
தவில்: திரு ராமதாஸ்
திரு கே.எஸ் கணேசன்

தமிழீழத் தேசிய கொடி ஏற்றம்
தமிழீழ விடுதலைப்புலிகளின் இறப்புரை

சிறப்புரை - எழுத்து இலக்கியமாகிறது

உரையாற்றுபவர்: பேராசிரியர். கா. சிவத்தம்பி,
தலைவர், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

இளைஞர் கவியரங்கு

பொருள்: நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்

தலைவர்: வட்டு இளம்கம்ப பாரதி

பங்கேற்போர்: திரு. இணுவை நாக சிவசிதம்பரம்
திரு இயக்கச்சி கருணாகரன்
திரு வவுனியா திலீபன்
திரு. செந்தமிழ்க்கிரன்

'வாத்ய ப்ருந்தா' :- இராமநாதன் நுண்கலைப் பிரிவினர்

இசைநிகழ்ச்சி:- திருமதி நாகேஸ்வரி பிரம்மானந்தா - பாட்டு
செல்வி பாக்கியலட்சுமி நடராஜா - வயலின்
திரு எஸ். மகேந்திரன் - மிருதங்கம்
செல்வன், கே. ஜெயராஜா - கஞ்சிரா

வடமராட்சி கலை, பண்பாட்டுக் கழகத்தினர் வழங்கும்
'எழுச்சிப் பாடல்களுக்கான அபிநயம்'
மன்னார் மாவட்ட விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினர் வழங்கும்
'எழுந்திடும் உணர்வுகள்' நாடகம்
வடமராட்சிப் பகுதி விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினர் வழங்கும்
'வீரமகன்' நாட்டிய நாடகம்
யாழ்/மயிலன்காடு நடிகமணி கலாமன்றம் வழங்கும்
'பூதத்தம்பி' இசை நாடகம்

---

## சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது) சுன்னாகம்

## முக்கிய அறிவித்தல்

சுன்னாகம் கிராமிய வங்கி வாடிக்கையாளர் அனைவர்க்கும்,

எமது சுன்னாகம் கிராமிய வங்கியின் வாடிக்கையாளர்கள் அனைவரும் சங்கத்தின் நலனையும், தங்கள் கணக்குகளின் நலனையும் கருதி, பின்வரும் திகதிகளில் குறிப்பிட்ட ஒழுங்கின்படி கிராமிய வங்கிக்கு தங்கள் கிராமிய வங்கிக் கையேடுகளுடன் வருகை தந்து, தங்கள் மீதிகளைச் சரிபார்த்துச் செல்லும்படி இத்தால் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக தங்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு மன்னிப்பு கோருகின்றேன்.

மேலும், கிராமிய வங்கிக்கு வருகை தந்து மீதியைச் சரிபார்க்காதவிடத்து, எமது பேரேடு காட்டும் மீதி சரியானது எனக் கருதி மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், இத்தால் தங்கள் கவனத்திற்கு அறியத் தருகின்றேன்.

6 6.91 காலை 9 00 மணிமுதல் மாலை 5 00 மணி வரை.
ஓய்வூதியக் கணக்கு இலக்கம் - 10001 - 10350 வரை.
கணக்கு இலக்கம் - 5001 - 5200 ,,

7. 6 91 காலை 9.00 மணிமுதல் மாலை 5 00 மணி வரை
கணக்கு இலக்கம் - 0001 - 600 வரை

8. 6.91 காலை 9 00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை
நிரந்தர சேமிப்பு க/கு இல - 20016 - 20030 வரை
நுகர்ச்சிக் கடன் கணக்குகள் - 15001 - 15100 வரை

தவிர்க்க முடியாத காரணங்களால் குறித்த திகதிகளில் சமுகமளிக்கத் தவறுவோர் 10-6-91 திங்கட்கிழமை காலை 9-00 மணிமுதல் மாலை 5-00 மணி வரை கிராமிய வங்கிக்கு சமுகமளித்து, கணக்குகளைச் சரிபார்க்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நன்றி

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
91-06-05

சி. குமரவேல்
தலைவர்

(R- 2635)

---

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் - யாழ்ப்பாணக்கிளை
## வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு

## அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 1991ஆம் ஆண்டு ஆனிமாதம் ஒன்பதாந்திகதி (1991-06-09) ஞாயிற்றுக் கிழமை பகல் 12.30 மணிக்கு மருதன்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் நடை பெறும். வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அனைவரும் இதில் பங்குபற்றுமாறு அழைக்கின்றோம். இதில் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடை பெறும்.

73, கண்டி றோட்,
யாழ்ப்பாணம்.
3.6.91

கௌரவ செயலாளர்.

(B/2626)

---

## நினைவு கூருகின்றோம்...



1991 - 06 - 06

லவன்
(சந்திரசேகரம் லவக்குமார்)

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் கந்தளாயில் சிறிலங்காப் படையினரின் சுற்றிவளைப்பின்போது சுட்டுக்கொல்லப்பட்ட

**23 தமிழர்கள்**

1986ஆம் ஆண்டு திருமலை நோக்கி பேருந்தில் பயணம் செய்கையில் சீனன்வாடியில் சிறிலங்காப்படைகளால் கடத்தப்பட்டு காணாமற்போன

**6 வயதுக்குழந்தை உட்பட 9 தமிழர்**

இதே ஆண்டு பலாலி இராணுவ முகாமுக்கு அடகுநகை எடுக்கப் போனபோது உலங்கு வானூர்தியின் தாக்குதலினால் உயிரிழந்த

**இரண்டு பொதுமக்கள்**

1987ஆம் ஆண்டு அச்சுவேலியில் சிறிலங்காப் படைகளுடனான மோதலில் வீரமரணமடைந்த

**லெப். பவான்** (சந்தையா நவநிதி - ஆவரங்கால்)
**லெப்-ரகு** (இராசதுரை ரகு - யாழ்ப்பாணம்)
**2ஆம்லெப். அச்சுதன்** (ஈஸ்வரலிங்கம் குமாரலிங்கம் - வல்வெட்டித்துறை)
**நீதவான்** (நடராசா சிறீஸ்கந்தராசா - நவாலி வடக்கு)
**லெப். மார்க்கண்டு** (சந்தையா கனகரத்தினம் - முழங்காவில்)
**குமணன்** (சதாசிவம் ரங்கநாதன் - தம்பலை அளவெட்டி)
**பூபன்** (சந்தையா சக்திவேல் - குருநகர்)

இதே ஆண்டு வீரமரணமடைந்த

**லவன்** (சந்திரசேகரம் லவக்குமார் - அரியாலை)

இதே ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில் மின்சாரம் தாக்கியதால் எமைப்பிரிந்த

**மோகன்** (சின்னத்துரை லோகேந்திரன் - தாவடி வடக்கு)

இதே ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத்தாக்குதலினாலும் மற்றும் பல்வேறு நடவடிக்கைகளாலும் கொல்லப்பட்ட

**8 பெண்கள் உட்பட 25க்கு மேற்பட்ட பொதுமக்கள்**

1988ஆம் ஆண்டு நித்திகைக்குளத்தில் எதிர்பாராமல் நிகழ்ந்த மிதி வெடிவிபத்தின் போது காயமுற்று சயனைட் உட்கொண்டதால் எமைப்பிரிந்த

**கப்டன் சுபேசன்** (பேரம்பலம் கிருஷ்ணபிள்ளை - புலோலி)

இதே ஆண்டு தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட மட்டக்களப்பு பிரஜைகள் குழுத்தலைவர்

**அருட்திரு சந்திரா பெர்னாண்டோ அவர்கள்**

1989ஆம் ஆண்டு தம்பசிட்டியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியபோது வீரமரணமடைந்த

**ராஜன்/விசு** (ஏரம்பமூர்த்தி விஜயமூர்த்தி - பருத்தித்துறை)

இதே சம்பவத்தில் உயிரிழந்த எமது ஆதரவாளரான ஒரு இளைஞன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(B/2629)

: விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

# இந்.அரசியல் தலைவர்கள பாதுகாப்பு பலம் பெறும்

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி மரண முற்றதைத் தொடர்ந்து இந்திய உயர் அரசியல் தலைவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மத்திய உள்துறை அமைச்சகம் மேலும் வலுப்படுத்தியுள்ளதாக உள்துறை அமைச்சர் சுபோத்கான் சகாய் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் கடந்த திங்கட்கிழமை பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் உள்துறை அமைச்சகம் நடத்திய கூட்டத்தின் முடிவில் சுபோத்கான சகாயினால் இந்த அறிவிப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் ஜனதா தளம், பாரதிய ஜனதாக் கட்சி, இந்திரா காங்கிரஸ், இந்திய கம்யூனிச கட்சி, இந்திய மாக்சிய கம்யூனிச கட்சி, சமாஜ்வாதி ஜனதாக் கட்சி ஆகியன கலந்து கொண்டன.

இதேநேரம் தலைமைத் தேர்தல் ஆணையாளர் ரி.என் சேஷனுக்கும் தேசிய பாதுகாப்பு அணியைச் சேர்ந்த சிறப்பு காவல் படைவீரர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என சுபோத்கான் தெரிவித்தார்.

# எரிமலை குழம்பில் சிக்கி ஜப்பானில் 32 பேர் மரணம்

(டோக்கியோ)

ஜப்பானில் டோக்கியோ நகரின் தென்மேற்கே ஒன்சோன் எரிமலை வெடித்ததில் 32க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். இந்த எரிமலை இருநூறு வருடங்களாக உறங்கிக் கிடந்தது. எரிமலை தொடர்ந்தும் அக்கினிக் குழம்பைக் கக்கி வருவதோடு, பாரிய பாறைகளையும் வெளித்தள்ளி வருவதால் எரிமலை மீண்டும் வெடிக்கக் கூடிய அபாயம் தென்படுகிறது.

எரிமலை வெடிக்கும் அறிகுறிகள் சென்ற மாதம் முதலே தென்பட்டன ஆனால் கடந்த திங்கள் இது இருந்தாற் போல் வெடிக்கத் தொடங்கியது. மலை அடிவாரத்தில் குடியிருப்பவர்கள் பாதுகாப்புத்தேடி வேறு இடங்களுக்கு ஏலவே மாறியிருந்தனர்.

இறந்தவர்களில் பலர் விஞ்ஞான ஆய்வாளரும், படப்பிடிப்பாளரும் அடங்குவர். முப்பது பேரைக் காணவில்லை.

# ஆயுதக்கிடங்கு வெடிவிபத்தில் 100 பேர் பலி

(அடிஸ்அபாபா)

எத்தியோப்பியாவின் தலைநகரான அடிஸ் அபாபாவில் ஆயுதக்கிடங்கு வெடித்ததால் 100க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். பலர் காயங்களுக்கு உள்ளாகினர்.

ஆயுதக் கிடங்கிலிருந்த ஏவுகணைகளும், வெடிகுண்டுகளும் நகரத்திலும், அயர்லாந்திலும் பகுதிகளிலும் விழுந்து வெடித்தன.

வீதிகளில் மனிதச்சடலங்கள் கிடப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிறமொழிப்பாடல்கள் பல இருந்தாலும், பதிக்குத்தமிழ் மொழியென்று அடித்துச் சொன்னார் பன்மொழிப் புலமை பெற்ற சுத்தானந்த மத பெரியார் தனிநாயகம் அடிகளார் அவர்கள். பக்தி இலக்கியப் பாடல்களுக்குத் தமிழ் மொழி இசைந்து கொடுக்கும் ஆற்றல் மிக்கது என்பதே அறிஞர்களுத்தாகும்.

காப்பிய வகையினைச் சேர்ந்த சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, வளையாபதி, மணிமேகலை போன்றவற்றில் இசையின் மகத்துவம் உணர்த்தப்பட்டுள்ளது. இசைத் தமிழ் இடம் பெறாத இலக்கிய ஆக்கங்களே இல்லையென்னுமளவுக்கு அது எல்லா வகை வளர்ச்சிப் பணிகளிலும் இடம் பெற்றுள்ளது. அதாநாயகர்கள் எல்லோருமே கலைப்பெரு மக்களே.

இசைத் தமிழுக்கு இனிமை சேர்க்கும் நோக்கில் இசைக் கருவிகள் பல உருவாக்கப்பட்டன. மிக நுணுக்கமாக உருவாக்கப்பட்டன. குழல், யாழ், முழவு என்பன, அவற்றுள் முக்கியமானவை குழலும், யாழும் மிடற்றிசையோடு ஒன்றிக் கலந்து இனிமை செய்ய உதவின முழவும் தாளநயத்தை வெளிப்படுத்த உதவின. இவ்விசைக் கருவிகளின் பெயர்களிலே தமிழ் மொழியின் சிறப்பெழுத்தான 'ழ' கரம் இடம் பெற்றிருப்பதையும் அவதானிக்கலாம்.

நாட்டியம், நாடகம் போன்ற கலையாக்கங்களுக்கும், காவடி, கரகம், கும்மி போன்ற ஆட்ட வகைகளிலும் இசைத்தமிழின் செல்வாக்கைப் பரக்கக் காணலாம். இசைத் தமிழும் இதனோடு சேர்ந்த கலைப்படைப்புகள் யாவும் மனிதனுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழியில் செலவிடவும், பண்பாட்டுச் சிறப்பினை வளர்க்கவும் பயன்பட வேண்டுமென்ற நோக்கிலேயே உருவாக்கப்பட்டன.

இசைத் தமிழின் வளர்ச்சியும், அதன் சாதனைகளும் பக்தி இலக்கிய வளர்ச்சியினை அடுத்தே ஆரம்பித்து நிலைத்து வந்தன. தமிழின் இனை மொழிகளாலும் சரி, பிறமொழியென்றாலும் சரி தமிழின் இசை வளர்ச்சியோடு ஒன்றித்த காரணத்தால் அதன் அமைப்பு முறையில் மாற்றங்கள் தோன்றின. இன்னும் சொல்வதானால் தமிழிசையின் விருத்தியைத் தடுக்க ஆரம்பித்தன. இதையுணர்ந்த தமிழ் மொழி வல்லுனர்களும், தமிழிசை ஆதரவாளர்களும் அதற்கு அணையிட்டுக் காப்பாற்ற முன்வந்தனர். மன்றங்கள், சபாக்கள் மூலமாக தமிழிசையை அரண்செய்ய முற்பட்டனர். இந்த முயற்சியிலே வெற்றியும் கிடைத்தது. ஆனாலும் வரட்டு வேதாந்தம் பேசித் தங்களையும் இனங்காட்ட முற்படும் ஒரு சிலர் தமிழிசையிலே என்ன இருக்கிறது என்று வாய் கூசாமல் உழறுகிறார்கள். அவர்கள் போகட்டும்.

காலத்தால் அழிக்க முடியாததும் மிகமிகத் தொன்மை வாய்ந்ததுமான நமது இசைத் தமிழ் வளர்ச்சியையும் தடுக்க முடியாது என்பது காலத்தால் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.

நமது இசையின் இனிமையை மேலும் சிறப்பிக்க உருவாக்கப்பட்ட இசைக்கருவிகளில் குழல் வகையும், யாழ்வகையும், முழவிசையும் பலவாகும் கைதேர்ந்து புகழ்பெற்ற விற்பன்னர் பலர் வாழ்ந்தார்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் இசைத் தமிழின் உன்னதத் தன்மையையும் இசைக்கருவிகளின் தோன்றம் வளர்ச்சி பற்றியும் சங்க இலக்கியங்கள் மிகத் தெளிவாக்கியுள்ளன.

கர்நாடக இசை மரபு என்னும் கட்டமைப்பில் தமிழிசை சேர்க்கப்பட்டாலும் ஆரம்ப இசையான பண்ணிசையும் தனியாக வளர்கிறது ஓதுவார்கள் எனப்படும் இசைவல்லார் இந்தவகையில் ஊட்டமளிக்கிறார்கள்.

மாறி மாறி வரும் சமுதாய அமைப்புக்கும் அதன் தேவைகளுக்கு ஏற்ப தேன் தமிழிசையைப் பயன்படுத்தலும் [illegible] புகிறார்கள் அந் [illegible] ஈடுபாடும் [illegible] தேவைகள் [illegible] யாகும் இவ்வகைப் பாடல்களின் செல்வாக்கு நிலைக்கும் என்பதற்கு உத்தரவாதம் எதுவும் இல்லை.

அழியாத வரம் பெற்றவைகள் என்று போற்றப்படும் பக்தி இலக்கியப்பாடல்களும், காலத்துக்கேற்ற வகையில் உருவாக்கம் பெற்ற இசை வித்துவான்களது ஆக்கங்களும் பிரசங்க இலக்கியப்பாடல்களும் தமிழிசையை அரண் செய்யவும் நாடுவார்க்குப் பேரின்பமளிக்கவும் போதுமானவை.

தேமதுரத் தமிழோசையை உலகமெல்லாம் பரவும் வகை செய்யப் பாரதியார் கண்ட கனவை நாம் நனவாக்கப் பாடுபடுவோம்.

---

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை குமணன்

(சதாசிவம் றங்கநாதன்)

| வீரஜனனம் | வீரமரணம் |
| --- | --- |
| 01 - 10 - 1962 | 06 - 06 - 1987 |

எம் அருமைத் தோழர்களே
நாங்கள் அழிந்து விடவில்லை
கல்லறைகளிலே இருந்து கொண்டு
இருகரங்களையும் நீட்டுகின்றோம்
எமது ஆயுதங்கள் என்று
உமது கைகளிலே வந்ததுவோ
அன்றே நாம் உளத்தால் மகிழ்ச்சி அடைந்தோம்
என்று நீங்கள் இந்த மண்ணின்
விடிவை ஏற்படுத்த இன்றீர்களோ
அன்றே இந்த தமிழீழத்திலே
மீண்டும் பிறப்போம்.

(அச்சுவேலியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணம் அடைந்தவர்)

இவருடன் வீரமரணமடைந்த லெப். பவான், 2ஆம் லெப். அச்சுதன், லெப். ரகு. நீதவான், பூபன், மார்க்கண்டு

ஆகியோருக்கும் எமது அஞ்சலிகள்

| | |
| --- | --- |
| தம்பனை, | பிரிவால் துயருறும் |
| அளவெட்டி. | உடன்பிறப்புக்கள் |

(R/ 1441)

---

# வீரவணக்கம்



## வீரவேங்கை பார்க்குகன்

பொறுப்பாளர்
தமிழீழ ஆய்வு நிறுவனம்
மன்னார் மாவட்டம்

| தாயின் மடியில் | தாயக விடிவில் |
| --- | --- |
| 21 . 05 . 1970 | 04 - 04 . 1991 |



## வீரவேங்கை அறிவழகன்

பொறுப்பாளர்
தமிழீழ ஆய்வு நிறுவனம்
மணலாறு மாவட்டம்

தாயக விடிவில் 06 . 03 . 1991

இலட்சியத்தின் மலர்வுக்காய்
இலக்கினிலே வீறு கொண்டாய்
தாய் மண்ணின் மீதினிலே
தலை சாய்த்து மடிந்து விட்டாய்

மன்னாரின் விடிவிற்காய்
மண்ணிலே உதிர்ந்திட்ட
போர்க் கொடியே பார்க்குகனே
போகின்றோம் உன்பாதையிலே

ஆய்வினிலே அறிவழகன்
அயராது உழைத்திட்டாய்
மணலாற்றில் பொறுப்பேற்று
மண்மீது வித்தானாய்

அற்புதக் கனவு கண்டீர்
அதை நிச்சயம் நனவாக்குவோம்
உயிர் துச்சம் எனக் கொண்டு
உங்கள் பாதையில் வீறு நடை
போடுறோம்

தமிழீழ ஆய்வு நிறுவனம்
தமிழீழம்

(B-2628)

பண்டைய தமிழனின் உயிர் நாடியான
இயல், இசை, நாடகம் இம்மண்ணில்

## முத்தமிழ் விழாவாக மலர்வதுகண்டு

தமிழீழ மக்களுடன் நாமும் எமது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுகின்றோம்!

தமிழீழத்தின் தனிப்பெரும் மருத்துவக் கல்லூரி நிறுவனம்

# சாயி மருத்துவக் கல்லூரி

**இல. 6, பருத்தித்துறை வீதி, 1 ஆம் ஒழுங்கை, யாழ்நகர்.**
(மருத்துவக் கல்லூரி)

**இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்நகர்.**
(தாதியர் கல்லூரி)

- தமிழீழத்தின் தனிப்பெரும் கலையான வர்மக்கலையின் தொகுதியான வர்மானிய அலகுமுறைச் சிகிச்சை
- ஹோமியோபதி மருத்துவம்
- தாதியர் பயிற்சி

இவைகளை எம் மக்களுக்கு தமிழ்மொழி மூலம் கற்பித்து வருகின்றோம்.

மும்முடிச் சோழமண்டலத்தின் புலிக்கொடி பாரெங்கும் பறக்க
எமது வாழ்த்துக்கள்!


(B-2618)

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகையில்

## முத்தமிழ் விழா சிறப்புற எமது வாழ்த்துக்கள்

**கணனிக் கல்வி புதிய வகுப்புக்கள் ஆரம்பம்** 10 - 6 - 91 (திங்கள், புதன், வெள்ளி)
8 - 06 - 91 (சனி, ஞாயிறு)

தமிழ்மொழியின் வளர்ச்சிகருதி எமது நிறுவனத்தில் கணனியில் தமிழ் எழுத்துக்களை உருவாக்கும் முறைபற்றியும், தமிழ், ஆங்கில ஆவணங்களை அச்சிடுதல் பற்றியும் புதிய பாடநெறி ஆரம்பமாகின்றது.
கணனித்துறையில் உள்ள சகல பாடங்களுக்கும் தமிழ் விளக்கங்கள் அளிக்கப்படும்.



# யுனிக்கோ கணனி நிலையம்

**37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**

" கணனிக் கல்வியின் முன்னோடிகள் "

(B/2618)

■ சிந்தனைக்கு ■

தமிழுக்கு அமுதென்று பேர் -
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.

— பாவேந்தர் பாரதிதாசன்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 06,06,1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 023-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 03

# முத்தமிழுக்கு விழா

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்கு இன்றி லிருந்து தொடர்ச்சியாக பத்து நாட்கள் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் பெருவிழா எடுக்கின்றனர்; குடாநாட்டின் நான்கு பகுதிகளில் இப்பெருவிழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பண்டைக் காலத்தில் முடியுடை மூவேந்தர்களும் குறுநில மன்னர்களும் தமிழ் மண்ணை ஆண்டபோது தமிழுக்கு பல்வேறு விழாக்கள் எடுக்கப்பட்டு தமிழ் போற்றிப் பாதுகாக்கப்பட்டது. அத்தோடு இணைந்து தமிழரின் கலையும், பண்பாடும் வளர்ந்தன / வளர்க்கப்பட்டன. தமிழரின் தேசிய உணர்வும் வீறுபெற்று இருந்தது. தமிழே அரியணையில் வீற்றிருந்தது. ஆனால் அந்நியர்களின் படை எடுப்புக்கள் தமிழ் மண்ணை மட்டும் ஆக்கிரமிக்கவில்லை, தமிழையே அரியணையில் இருந்து வீழ்த்தியதெனலாம்.

பல நூற்றாண்டு காலமாக அந்நியர் ஆதிக்கத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த தமிழின் மொழி, கலை, பண்பாடு பல்வேறு வழிகளினால் சிதைக்கப்பட்டன. இதனால் தமிழ் மொழி தனது தனித்துவத்தை இழந்து அந்நிய மொழிகளின் ஊடுருவலுக்கும் உள்ளானது.

அதேவேளை இலங்கையில் தமிழ் தேசிய இனத்தையே திட்டமிட்டுச் சிதைத்துவிட சிறிலங்கா அரசாங்கம் தீவிரமாகச் செயற்பட்டது / செயற்பட்டு வருகின்றது. இதன் காரணமாக தமிழ் மொழியும், பண்பாடும், நாகரீகமும் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. இந்நிலையில் அவற்றை அழியாது பாதுகாத்துக் கொள்வது இன்றைய எமது கடமையாகும். இதனை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ள முத்தமிழ் விழா நிறைவு செய்யும் என்பதில் இரு கருத்திற்கு இடமில்லை.

ஒரு தேசிய இனத்தின் மொழி, கலை, பண்பாடு என்பன அத்தேசிய இனத்தின் நாகரீகத்திற்கான அடிப்படையாக அமைகின்றன; இந்நிலையில் அத்தேசிய இனம் நாகரீகமானதாகவும், உறுதியானதாகவும் வளம்பெற வேண்டுமானால் அத்தேசிய இனத்தின் மொழி, கலை, பண்பாடு என்பன பாதுகாக்கப்பட வேண்டும் வளர்க்கப்பட வேண்டும்.

1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு தமிழரின் மொழி, பண்பாடு ஆகியவற்றின் மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டது. இத்தமிழாராய்ச்சி மாநாடு இலங்கைத் தமிழரின் தேசிய விழிப்புணர்ச்சிக்கு வித்திட்டது. நூற்றாண்டு காலமாக சிதைக்கப்பட்டு வந்த தமிழ் மொழியும், பண்பாடும் பாதுகாக்கப்பட வேண்டும் என இளைஞர் மத்தியில் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது.

இவ்விழிப்புணர்வு இலங்கைத் தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு ஊன்றுகோலாய் அமைந்தது. இன்று இப்போராட்டம் வளர்ச்சி பெற்று உலகத் தமிழ் இனத்திற்கே வழிகாட்டும் ஒரு போராட்டமாக வளர்ந்துள்ளது.

அதேவேளை இன்று விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் எடுக்கும் முத்தமிழ் விழா தமிழ்த் தேசியத்தின் எழுச்சி விழா என்றே சொல்லலாம். சங்கம் வளர்த்து தொன்மையான தமிழரின் கலை, பண்பாட்டை பேணியது போன்று விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகம் எடுக்கும் முத்தமிழ் விழாவும் தமிழரின் சிறப்புமிக்க கலை, பண்பாடு என்பனவற்றைப் பேணுவதோடு காலத்திற்கேற்ற நாகரிகத்தையும் இணைத்து முத்தமிழுக்கும் மெருகேற்றும் என்பதோடு இலங்கை தமிழரின் தேசிய உணர்விற்கும் உரமூட்டும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. இந்நிலையில் இந்த முத்தமிழ் விழா சிறப்புற நாமும் வாழ்த்துவோம்!

# ஊரடங்கைத் தொடர்ந்து மக்கள் வெளியேற்றம்

மன்னார் மாவட்டத்தினைச் சேர்ந்த பொது மக்கள் இரவு பகலாக தமது வீடுகளில் இருந்து வெளியேறி மடு அகதிமுகாமிலும், பரப்பான் கண்டல் காத்தான்குளம் பகுதிகளிலுள்ள தேவாலயங்களிலும் தஞ்சமடைந்துவருகின்றனர்,

திங்கள் மாலை ஐந்து மணியில் இருந்து மன்னார்மாவட்டத்தில் மடு, மன்னார்த்தீவு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் காலவரையறையற்ற ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டதையடுத்தே பொது மக்கள் இவ்வாறு வெளியேறிவருவதாகத்தெரியவருகிறது.

பாலைக்குழி, கண்ணாட்டி, வட்டக்கண்டல், ஆண்டாங்குளம் பள்ளிவாசப்பிட்டி, அடம்பன்தாழ்வு பாலிமோட்டை காத்தான்குளம் போன்ற இடங்களைச்சேர்ந்தபொதுமக்கள் மடு அகதிமுகாமிலும் கட்டைக்காடு இலந்தமோட்டை உயித்தராசன் குளம் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள்பரப்பன் கண்டல் காத்தான்குளம்பகுதிகளிலுள்ளதேவாலயங்களிலும் தஞ்சமடைந்து வருகிறார்கள்.

# இசைத் தமிழ்

தேன் தமிழ் என்றும், தெள்ளுதமிழ் என்றும், பைந்தமிழ் என்றும், தெய்வீகத் தமிழ் என்றும் போற்றப்படுகின்ற தொன்மொழியாம் நம் அன்னை மொழியிலே இனிமை இரண்டறக் கலந்திருக்கிறது. அந்த இனிமையையும் தமிழ் மொழியையும் பிரித்து அனுபவிக்க முடியாது வேற்று நாட்டார்கூட இவ்வினிமையில் மயங்கியிருக்கின்றார்கள், தேனூறும் தெள்ளு தமிழ் மொழியைக் கற்கவும் முன்வந்தார்கள். எதிர்பார்த்த பயனையும் பெற்று மகிழ்ந்தார்கள்.

நந்தமிழ் மொழியின் சிறப்புக்களை முன்வைத்து அதை மூன்றாக வகுத்து அதற்கு முத்தமிழ் என நாமஞ்சூட்டினார்கள் பெரியோர்கள். இயல், இசை, நாடகம் என்ற முப்பிரிவும் ஒன்றிணைந்த நிலையினிலே நந்தமிழ் மொழி முத்தமிழானது. இந்த முப்பெரும் பிரிவுகளிலே நடுநாயகமாய் இடம்பெறுவது இசைத் தமிழ்.

இசைக்கு இசையாதவர்கள் எவருமே இலர். இசைக்கு வசியமாகாத உயிர்க் குலங்கள் மிகமிகக் குறைவு என்று கூடச் சொல்லலாம். மதம் பிடித்த யானையும், படம் விரித்தாடும் பாம்புகளும் பறவையினங்களில் பலவும் இசையால் மயங்கித் தம்வசமிழக்கின்றன. பாலைவனங்களிற் பதுங்கியிருந்து வழிப்பறி செய்யும் கொள்ளையர் கூட்டத்தினர்கூட இசைக்கு மயங்கி தம் வன்செயல்களைத் தவிர்த்து நிற்பர். அப்படியாயின் இந்த இசையின் ஆற்றல் தானென்ன?

இயற்கை தரும் இசை நாதம் ஓங்காரநாதம். அது இணையில்லா நாதம், இயற்கையின் இயக்க சக்தியை உணரவைக்கும் நாதம். அண்ட சராசரங்களை ஒழுங்கு தப்பாது இயங்க வைப்பவன் இறைவன். இந்த ஒழுங்கிலே தவறு நேர்ந்தால் அது அழிவுக்கே வழியமைத்திடும்.

ஏழிசையாயும், அந்த இசையின் பிரசாத பயனாகவும் உள்ள இறைவனை வசமாக்கிப் பயன் பெற இசையையே கருவாக்கி பயன் பெற்ற நம் முன்னோர்கள் முத்தமிழிலே இசைத்தமிழை முழுப்பிணைப்பினையும் பலப்படுத்திக் கொண்டார்கள்.

இவ்விசை கலவாத கலைப் படைப்புக்களே இல்லையெனலாம். கட்புலன் வழியும் செவிப்புலன் வழியும் நாம் நுகர்ந்தனுபவிக்கும் கலையாக்கங்களுக்கு மேலும் மேலும் மெருகூட்ட இசை கைகொடுத்து உதவுகிறது என்பதில் எவருக்குமே ஐயப்பாடு இருக்க முடியாது.

மருத்துவிச்சிப் பாடலுடன் ஆரம்பமாகும் இசை, வாழ்வின் வெவ்வேறு நிலையிலும் பரிச்சயமாகி ஒப்பாரி சொல்லும் தேவையோடு பூரணத்துவமாவது ஒருபுறம் காதலிலே வெற்றி காணும் வகையில் முயற்சிக்கும் பாடல்கள், தொழிலாளர் தமக்கு அலுப்புத்தட்டா வண்ணம் பாடும் பாடல்கள் என்று எத்தனையோ வகையான பாடல்கள் நம் இசைத் தமிழ்ப் பாடல்களாக வளம் பெற்றுள்ளன. இவை நாட்டார் பாடல்கள், கிராமியப் பாடல்கள் என்ற வகைகளைச் சேர்ந்தவை.

கட்டுக்கோப்பான இசை மரபின் ஆரம்பம் வைணவ மதப் பெரியார் பாடல்கள் மூலமாகவும், சைவ நாயன்மார்களுடைய தேவாரப் பாடல்கள் மூலமாகவும், அண்மையிலே தோன்றிய அருணகிரியார் திருப்புகழ் மூலமாகவும், மேலும் பல பெரியார்களின் நன்முயற்சிகளாலுமே ஆக்கம் பெற்றுயர்ந்தன (3 ஆம் பக்கம் பார்க்க)

அ. நமசிவாயம்
இணைக்காரியதரிசி
யாழ் அண்ணாமலை
இசைத்தமிழ் மன்றம்

கானகத்தில்
ஒரு
காப்பகம்
சனிக்கிழமை மீண்டும்
தொடரும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது தேசிய இனக் கட்டமைப்பை சிதைத்து, இனரீதியாக எம்மை அழித்துவிட நீண்ட காலமாகவே எமது எதிரியான சிங்கள இனவாத அரசு திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது. எமது மொழியை அழித்து, எமது கலைகலாசாரத்தை சீரழித்து, எமது வரலாற்றை திரித்து, எமது பொருளாதார வாழ்வை சீர்குலைத்து, காலம் காலமாக நாம் வாழ்ந்து வந்த எமது தாயகப் பூமியை ஆக்கிரமித்து—ஒட்டுமொத்தத்தில், எமது தேசிய கட்டமைப்பை சிதைத்துவிட எமது எதிரி கங்கணம் கட்டி நிற்கிறான். இந்த இன ஒழிப்புத்திட்டத்தின் பூதாகரமான வடிவமாகவே இன்றைய யுத்தம் எமது மக்களுக்கு எதிராக ஏவப்பட்டிருக்கிறது.

இந்த இக்கட்டான காலகட்டத்தில் எமது இனத்தின் தேசியகட்டமைப்பு சீர்குலையாது பாதுகாப்பது எமது விடுதலைப் போராட்டத்தின் பிரதான இலட்சியமாக அமைய வேண்டும். இந்த நோக்கில், எமது தேசியத்தின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும், கட்டுக்கோப்பிற்கும் முதுகெலும்பாகவுள்ள எமது மொழி, கலை, கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும். பேணி வளர்க்கப்பட வேண்டும்.

இந்தவரலாற்றுத் தேவையை நன்குணர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கலை கலாசாரப் பிரிவினர் முத்தமிழ் விழா ஒன்றை பெரிய அளவில் அரங்கேற்ற இருப்பது எனக்கு பெருமகிழ்ச்சியை தருகிறது. இந்த முத்தமிழ் விழா எமது தாயகத்தின் வளர்ச்சிக்கும் எமது தேசியத்தின் எழுச்சிக்கும் முனைப்பூட்டுவதாக அமையுமென நம்புகிறேன்; இந்தக் கலை நிகழ்வு எமது தேசிய கலாசாரத்தில் ஒரு புரட்சிகரமான மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

நான் கலை, இலக்கியங்களை மதிப்பவன்; ரசிப்பவன். கலை, இலக்கியப் படைப்பாளிகளை கௌரவிப்பவன்; கலை கலைக்காக அல்லாமல், மக்களுக்காகவே படைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவன், கலை இலக்கியப் படைப்புகள் மக்களைச் சிந்திக்கத் தூண்ட வேண்டும் பழமையிலும் பொய்மையிலும் பல்வேறு மாயைகளிலும் சிறைப்பட்டுக் கிடக்கும் மக்கள் மனதில் புரட்சிகரப் பார்வையை தோற்றுவிக்கவேண்டும். மாறிவரும் சமூக புறநிலைகளுக்கு ஒத்திசைவாக சமூக விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

நாம் இன்று ஒரு புரட்சிகரமான யுகத்தில் வாழ்கிறோம். பூகம்பமான மாற்றங்கள் உருவாகி வரும் புதியதொரு சகாப்தத்தில் வாழ்கிறோம். தமிழீழ மக்கள் இன்று விடுதலை வேண்டி போர்க்கோலம் பூண்டு நிற்கிறார்கள். எமது தேசிய வாழ்வின் சகல பரிமாணங்களிலும் வியாபித்து நிற்கும் ஒரு வரலாற்று இயக்கத்திலிருந்து கலைஞர்களும், அறிஞர்களும் அந்நியப்பட்டு நிற்க முடியாது. அப்படி அந்நியப்படுவது மக்களில் இருந்தும் வாழ்க்கையில் நிதர்சனத்திலிருந்தும் அந்நியப்படுதலாக முடியும்.

இந்தக் காலகட்டத்தில், கலைஞர்கள், எழுத்தாளர்கள் அறிஞர்கள் ஆகியோரிடமிருந்து நான் கூடிய அளவு பங்களிப்பை எதிர்பார்க்கிறேன். ஒருதாயகத்தைக் கட்டியெழுப்பும் பணி புனிதமானது. இந்தப் புனித பணியில் பங்கு கொள்வது எல்லோரதும் தேசிய கடன். ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புதமான தியாகத்தில் உருவாகிவரும் எமது தாயகத்தை ஒரு உன்னதமான, மேன்மையான சமுதாயமாக மாற்றியமைக்க வேண்டும்; இந்த சமூக மாற்றத்திற்கு வழிகோலும் வகையில் சிந்தனையாளர்களும், சிருஷ்டி கர்த்தாக்களும் எமது இயக்கத்திற்குப் பக்கபலமாக நின்று பணியாற்ற வேண்டும்.

இன்றைய காலத்தின்தேவைக்கேற்ப, வரலாற்று ஓட்டத்திற்கு அமைய, கலை, இலக்கிய கர்த்தாக்கள் புதுமையான புரட்சிகரமான படைப்புக்களை சிருஷ்டிக்க வேண்டும்; இந்தப் படைப்புக்கள் எமது புனித விடுதலைப் போராட்டத்திற்கு உரமூட்டுவதாக அமைய வேண்டும். சமூகப் புரட்சிக்கு வித்திடுவதாக அமைய வேண்டும்.

சமூகப் புரட்சி என்பது கலாசார மறுமலர்ச்சியை உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே எனது கருத்து. சமூகப் புறநிலையில் மாற்றம் ஏற்படும் பொழுது அகநிலையிலும் மாற்றம் ஏற்படுவது அவசியமானது. பழைய முரண்பாடுகள் நிறைந்த சமூக உறவுகளை உடைத்தெறிந்து, புதிய சமூக உறவுகளைக் கட்டியெழுப்பும்போது இந்த சமூக மாற்றத்திற்கு ஏற்ப, மக்களின் மனவுலகிலும் ஒரு புரட்சி நிகழ வேண்டும். புதிய சமுதாயத்தில், புதிய உறவுகளைக் கொண்ட ஒரு புதிய வாழ்க்கையைத் தழுவும் மக்கள் ஒரு புரட்சிகரமான உலகப் பார்வையைக் கொண்டவர்களாக இருக்கவேண்டும் இங்கு தான் கலாசார மறுமலர்ச்சி முக்கியமாகிறது.

கலாசாரம் உயர்நிலை எய்தும்பொழுதே ஒரு இனம் மகிமை பெறுகிறது மனித வாழ்வு உன்னதம் பெறுகிறது; மனிதம் வளர்ச்சி பெறுகிறது. கலாசாரம் உயர்நிலை பெறுவதாயின் கலாசார மறுமலர்ச்சி அவசியம். கலாசாரப் புரட்சி அவசியம்.

மிகத் தொன்மை வாய்ந்த நீண்ட வரலாறுடைய எந்தவொரு கலாசாரத்திலும்பழைமைவாதக் கருத்துக்களும், பார்வைகளும், காலத்துக்கு ஒவ்வாத வழக்குகளும், சம்பிரதாயங்களும், மூடநம்பிக்கைகளும் வேரூன்றியிருப்பது இயல்பு. எமது கலாசாரமும் இதற்கு விதிவிலக்கல்ல. கலாசாரம் என்ற கோலத்தில் எமதுசமூக வாழ்வில் ஊடுருவி நிற்கும் பிற்போக்கான பண்புகளை, வழக்குகளை, கருத்தோட்டங்களை நாம் இனம் கண்டு களைதல் அவசியம்;

பழையன கழிந்து புதியன சேர்ந்து செழுமைப்படும் கலை கலாசாரம், பண்பாடு எமது இனத்திற்குப் பெருமை சேர்க்கும். எமது மக்கள் மனவுலகில் ஒரு புரட்சிகரமான விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும்.

இந்தப் புரட்சிகரமான கலாசாரப் பணிக்கு முத்தமிழ்விழா ஒரு முன்னோடியாக அமையுமென நம்புகின்றேன்.

விழாசிறக்கவும், விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவினரின் பணி வளரவும் என் ஆசியும் ஆதரவும் என்றும் உண்டு.

## தனியார் நிறுவனங்கள் ஒத்துழைக்க வேண்டுகோள்

(நமது நிருபர்)

இன்று 06-06-91 தொடக்கம் 15-06-91 வரை யாழ். மாவட்டங்களில் நடைபெறும் முத்தமிழ் விழாவை முன்னிட்டு, யாழ். குடாநாட்டில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் இந்நாட்களில் மூடி, முத்தமிழ் விழாவிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தனியார் கல்வி நிறுவனங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் நாளேடுகளுக்கு விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பொன்றில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## ஹெலிகொப்டரை பயன்படுத்த உத்தரவு

தென் இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஹெலிகொப்டர்களையும் பயன்படுத்த சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உத்தரவிட்டுள்ளார்.

## தகவல் தருவோருக்கு ஐந்து லட்சம் சன்மானம்

(சென்னை)

சிறிபெரும்புதூரில் ராஜீவ் காந்தியின் கொலையோடு தொடர்புள்ளவராக கூறப்படும் பெண்ணைப் பற்றியும் அவரது கூட்டாளி என்று கருதப்படும் ஆணைப் பற்றியும் அடையாளம் கண்டு பிடிக்க உதவுவோருக்கு ஐந்து லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாம்

மக்கள் துப்பறிவதற்கு உதவியாக அந்த இருவரின் புகைப் படங்கள் கொண்ட துண்டுப் பிரசுரங்களை வடக்குக் கிழக்குப் பகுதிகளில் விமானத்தில் இருந்து போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக இந்திய புலனாய்வுத்துறை அதிகாரி விஜயகரன் தெரிவித்தார்.

## பொலிஸ் அத்தியட்சகரின் விளக்கம் விபரீதமானது

(கொழும்பு)

''இப்படித்தான் சுடுவது'' என்றுகூறி குடிபோதையில் இருந்த பொலிஸ் அத்தியட்சகர் தர்மதாசா தன்னைத் தானே சுட்டார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இந்த மரணம் தொடர்பாக நடந்த மரண விசாரணையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

சம்பவதினம் பொலிஸ் அத்தியட்சகர் குடிபோதையில் இருந்தார் என்றும், இப்படித்தான் சுடுவதுஎன்று பிஸ்டலை காதுக்கருகில் கொண்டு சென்றபோது அது வெடித்து மரணமுற்றார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

விசாரணையின் முடிவில் விபத்து மரணமென நீதிபதியால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## ராஜீவைக் கொன்றதாக கருதப்படும் பெண்ணின் இனத்தைக் கண்டறிய ஆய்வு

(டில்லி)

ராஜீவின் இறப்புடன் சம்பந்தப்பட்டதாக கருதப்படும் பெண்ணின் சடலத்தை இந்திய விஞ்ஞானிகள் பரிசோதித்து அப்பெண் எந்த இனத்தை சேர்ந்தவர் போன்ற விபரங்களை அறிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக நேற்று தெரிவிக்கப்பட்டது

## பங்களாதேஷ் தளபதிகள் பதவி நீக்கம்

(டாக்கா)

பங்களாதேஷின் விமானப் படை, கடற்படைத் தலைவர்களை அந்நாட்டின் தற்காலிக ஜனாதிபதி சகாப்தீன் பதவியில் இருந்து நீக்கியுள்ளார்.

நேற்று முன்தினம் டாக்காவில் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை பங்களாதேஷின் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டது.

ஏப்ரல் 20 ஆம் திகதி வீசிய பெரும் புயல் காற்றின் போது பல விமானங்களும் கடற்படைக் கப்பல்களும் சேதமுறுவதை அவர்களால் தடுக்க முடியவில்லை என்பதால் அவர்களை நீக்கியதாக பாதுகாப்பு அமைச்சினால் கூறப்பட்டது.

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவை உத்தியோகஸ்தர்களுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளது. இதற்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கச்சேரியில் உள்ள சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளும்படி யாழ் அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (லோ)

## கங்கையும் தேம்ஸும் பாவனைக்கு உதவாதவை

இந்தியாவிலுள்ள புனித நிலைகள் எனப்படும் கங்கையும், யமுனையும், மற்றும் இங்கிலாந்தின் தேம்ஸ் நதியும் மனிதப் பாவனைக்கு உதவாதவை எனக் உலக சுற்றாடல் தாபனம் கூறியுள்ளது. இலங்கையில் வாழைச்சேனை கடதாசி ஆலைக் கழிவால் வளவகங்கையும், நீர்கொழும்பு வாவி எண்ணெயினாலும், தொழிற்சாலைக் கழிவுகளாலும். களனி கங்கை இறந்த மீன்கள் மிதந்து கொண்டிருப்பதாலும், மொறட்டுவை, இரத்மலானை, எக்கலப் பகுதிகளில் தொழிற்சாலைக் கழிவுகளாலும் பாதிக்கப்பட்டு நீர் அசுத்த மடைந்திருப்பதாக கூறப்படுகிறது நேற்று உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்ட உலக சுற்றாடல் தினத்தையொட்டி வெளிவந்த செய்திகளில் மேலும் இந்தியாவில் மேற்பரப்பிலுள்ள எழுபது சதவிகிதமானது அசுத்தமானது எனக் கூறப்பட்டுள்ளது.

## வெள்ளத்தில் மூழ்கி இருபத்தியேழுபேர் பலி

காலி, களுத்துறை, கம்பகா ஆகிய பகுதிகளில் வெள்ளத்தில் மூழ்கி 27 பேர் உயிரிழந்தார்கள். சுமார் இரண்டு லட்சம் பேர் வீடுகளை இழந்து அகதிகளாகியுள்ளனர்.

வெள்ள நிவாரண வேலைகளுக்கென திறைச்சேரி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதே வேளை சர்வதேச நிவாரண உதவியும் அரசாங்கத்தினால் கோரப்பட்டுள்ளது.

## மாற்று எரிபொருள் வழங்கல் மாநாடு

(கொழும்பு)

மாற்று எரிபொருள் வழங்கல் தொடர்பான சர்வதேச மாநாடு கொழும்பில் எதிர்வரும் ஆகஸ்ட் 19ஆம் திகதி முதல் 21-ம் திகதிவரை நடைபெறும் அடிப்படை ஆய்வு நிலையம், மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சு, புதுடில்லியிலுள்ள ஆசிய எரிபொருள் ஆய்வு நிலையம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்த மாநாடு நடைபெறவிருக்கிறது

இந்த மாநாட்டில் காற்று, சூரியசக்தி, வனசக்தி, உயிரின தாவரக் கழிவுப் பொருள்கள் மூலம் பெறப்படும் எரிபொருள் சக்தி, நீர் மின் சக்தி, சுற்றாடல் தாக்கம் பற்றியும் ஆராயப்படும் இந்த மாநாட்டின் போது மாற்று எரிபொருள் வழங்கல் பற்றிய கண்காட்சி ஒன்றும் இடம் பெறும்,

## உயிரிழந்தோருக்கான கொடுப்பனவுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஊனமுற்றோர் மற்றும் உயிரிழந்தோருக்கான கொடுப்பனவுகள் மீண்டும் யாழ் செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ் செயலகத்தில் பொருளாதார கஷ்டநிலை தோன்றியதால் இந்த கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு இருந்தன இப்பொழுது அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய போது கணிசமான அளவு பணம் கொண்டு வந்திருந்ததைத் தொடர்ந்து மீண்டும் இந்த கொடுப்பனவுகளை ஆரம்பிக்க கூடியதாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

## ராஜீவ் கொலையுடன் சி. ஐ. ஏக்கு தொடர்பு

### ராஜ்யசபா உறுப்பினர் கருத்து

ராஜீவ் காந்தியின் மரணத்தோடு சி. ஐ. ஏக்கும் தொடர்பு இருந்திருக்கலாமென ராஜ்யசபா உறுப்பினர் சிலர் தெரிவித்துள்ளனர்.

நேற்று ராஜ்யசபாவில் நடந்த ராஜீவ் காந்தி கொலை தொடர்பான விசாரணையை விரிவுபடுத்த வேண்டும் என்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய ராஜ்யசபா உறுப்பினர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

## பாலஸ்தீன தளங்கள் மீது இஸ்ரேல் குண்டு வீச்சு

(பெய்ரூட்)

தெற்கு லெபனானிலுள்ள பாலஸ்தீன தளங்களை இஸ்ரேல் மீண்டும் குண்டு வீசித் தாக்கியுள்ளது.

1982 ஆம் ஆண்டு லெபனான் மீது இஸ்ரேல் எடுத்த படையெடுப்பிற்குப் பின்னர் லெபனான் மீது நடத்தப்பட்ட மிகப் பெரும் தாக்குதல் இது என்று நேரில் பார்த்த நிருபர் தெரிவித்ததாக பி.பி.ஸி. தெரிவித்தது.

இத் தாக்குதலில் குறைந்தது 13 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர் என்றும் 12 பாடசாலை சிறுவர்கள் உட்பட 38 பேர் காயமுற்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே நேரம் லெபனானிய பிரதம மந்திரி ''ஒன்றுமறியா மக்களைக் கொல்லும் இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்க வேண்டாம்'' என அமெரிக்காவையும், ஐ. நா. சபையிடமும் கேட்டுள்ளார்.

அதேவேளை சர்வதேச சமாதானக் குழுவொன்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் இஸ்ரேலிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். இக் குழுவினர் ஜெருசலேமிலிருந்து ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களினூடாக ஜோர்தான் தலைநகரான அம்மான் வரை ஊர்வலமொன்றை நடத்த திட்டமிட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**இராணுவத்தின்**

பகுதியில் புதிதாக திறக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தின் முன்வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிசார் நேற்று முன்தினம் காலை அவ்வழியால் வந்த பொதுமகன் ஒருவரைக் கைதுசெய்து பலமாகத் தாக்கி சித்திரவதை செய்தனர்

அப்போது அப்பகுதிக்கு ரோந்து வந்த முறக்கொட்டாஞ்சேனை இராணுவத்தினர் பொலிசாரிடம் மேற்படி நபர் தாக்கப்படுவது பற்றி விசாரித்தனர். விசாரணையின்போது பொலிசாருக்கும் இராணுவத்தினருக்குமிடையே வாய்த் தகராறு ஏற்பட்டது. இது முற்றவே இருவருக்குமிடையில் அது துப்பாக்கிச் சண்டையாக மாறியது. இதன்போது இராணுவத்தினரால் இரண்டு பொலிசார் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பியோடினர்.

தாக்குதலுக்கு உள்ளான பொதுமகன் விடுதலை செய்யப்பட்டதுடன் துப்பாக்கிப் பிரயோகம் செய்த இராணுவ வீரனை ஏனைய இராணுவத்தினர் தமது முகாமிற்கு கட்டி இழுத்துச் சென்றனர்.

---

**வீரவணக்கம்**

மரணமானார்.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை உன்னிச்சையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நடைபெற்ற நேரடி மோதலின்போது காயமடைந்த வீரவேங்கை ஜெயராஜ் (35 ஆம் கிராமம்) நேற்று முன்தினம் வீரமரணமடைந்தார்.

இவர்கள் இருவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

---

**ஆனையிறவு**

முகாமைச் சுற்றி வட்டமிட்டுத் தாக்குதலை நடாத்திக் கொண்டிருக்க இரண்டு ஹெலிகள் முகாமுக்குள் இறங்கிச் சென்றன. இதன்போது இரண்டு பொம்மர்களும் ஆறு குண்டுகளை வீசித்தள்ளின.

மீண்டும் 9-20ற்கு அப்பகுதிக்கு வந்த இரண்டு பொம்மர்கள் முகாமைச் சுற்றிவிட்டு செல்ல நான்கு ஹெலிகள் முகாமிற்குள் தரையிறங்கிச் சென்றன.

பின்னர் 10-45 மணியளவில் வந்த இரண்டு பொம்மர்களும் மூன்று ஹெலியும் முகாமைச் சுற்றிவிட்டு பொம்மர்கள் குண்டு வீச்சில் ஈடுபட மூன்று ஹெலிகளும் தரையிறங்கிச் சென்றன. பொம்மர்கள் இரண்டு குண்டுகளை வீசின.

இறுதியாக 12-10ற்கு வந்த இரண்டு பொம்மர்களும் முகாமைச் சுற்றி நான்கு குண்டுகளை வீச நான்கு ஹெலிகள் முகாமிற்குள் இறங்கிச் சென்றன.

ஆயினும் முகாமைச் சுற்றி வீசப்பட்ட குண்டுகளினால் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை.

---

**வெளியே**

வரை தமது பழைய அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்த முடியும்.

இவ்வாறு புலிகளின் செய்திக்குறிப்பொன்று கூறுகின்றது.

புதிய அனுமதிப்பத்திரம் தொடர்பான விபரங்கள் நாளைய ஈழநாதத்தில் வெளிவரும்.

---

**நயினை**

லர் அனுமதியளிக்கவில்லை உள்ளூரில் (நயினாதீவு) உள்ள மக்களுடன்தான் இவ் உற்சவங்களை நடத்துமாறும் கடற் படையினர் அறங்காவலர் சபைக்கு உத்தரவு இட்டுள்ளனராம்.

மேலும் பிந்திக் கிடைத்த செய்தியின்படி எழுவைதீவு, அனலைதீவு, நெடுந்தீவுப் பகுதி மக்களும் நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மக்களும் இவ் உற்சவ காலங்களில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (14)

---

**பாடசாலைமீது**

(வயது 36) என்பவரும் அவருடைய மகன் நிரோஷனும் அவ்விடத்திலேயே உடல் சிதறிப் பலியானார்கள். வீடும்பலத்த சேதமடைந்துள்ளது.

இதே வேளை பாடசாலை மாணவனான சத்திய மூர்த்தி காயமடைந்தார். பாடசாலைக் கட்டடமும் பலத்த சேதமடைந்தது.

---

**இலட்சியத்தை**

பலம்பொருந்திய ஒரு இராணுவத்தை அமைக்க வேண்டும். இதற்காக புதிய இளைஞர்களும், யுவதிகளும் எம்முடன் இணைந்து அணிதிரள வேண்டும். இதன் மூலம் சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முறியடித்து தியாகி சிவகுமாரனின் இலட்சியத்தை வென்றடையக் கூடியதாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

மேலும்பல முன்னணி பிரமுகர்கள் இக்கூட்டத்தில் உரையாற்றினர் தியாகி சிவகுமாரனின் உருவப்படம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.

(க,லோ)

---

**முத்தமிழ்விழா**

பகுதிகளிலுமிருந்து நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றி சிறப்பிக்கவுள்ளனர் பட்டி மன்றம், கவிதையரங்கம் நடனநிகழ்ச்சிகள், நாடகங்கள் எனப் பல நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. இன்றைய நிகழ்ச்சி நிரல் இரண்டாம் பக்கத்தில் காண்க.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.